**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1, பத்மநாபபுரம்**

**முன்னிலை திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,

**2026** ஆம் ஆண்டு ஜுன் மாதம் 03 ஆம் நாள் **புதன்கிழமை**

திருவள்ளுவர் ஆண்டு 2057, பராபவ வருடம் வைகாசி திங்கள் 20-ம் நாள்

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண்.141/2023**

**CNR.No.TNKK090030402023**

| | |
|---|---|
| அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>தக்கலை காவல் நிலையம்,<br>குற்ற எண்.29/2023 | ............... குற்றமுறையீட்டாளர், |
| **/எதிர்/** | |
| 1. நாக ராஜன்(வயது 51/2023),<br>த/பெ. அண்ணாமலை,<br>35/55, செட்டி தெரு,<br>பத்மநாபபுரம், தக்கலை அஞ்சல். | ............... 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| 2. ராஜன் (எ) வவ்வால் (வயது 37/2023,<br>த/பெ. பிரபாகரன்,<br>முடகுளம், பத்மநாபபுரம்,<br>தக்கலை அஞ்சல். | ............... 2-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| 3. ஷீபா (வயது 42/2023),<br>க/பெ. நாக ராஜன்,<br>35/55, செட்டி தெரு,<br>பத்மநாபபுரம், தக்கலை அஞ்சல். | ............... 3-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| 4. வின்சென்ட் சர்ச்சில் (வயது 21/2023),<br>த/பெ. சந்திரசேகர், | |

| | |
|---|---|
| 3/24 C, சாரோடு, கோயில் விளை,<br>தக்கலை அஞ்சல். | ............... 4-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |

## CASE SUMMARY

| Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019 | | | |
|---|---|---|---|
| 1. | Case Number | | Calendar Case (CC) No.141 of 2023 |
| 2. | Name of the Police Station and Crime Number | | State of Tamilnadu,<br>Represented by its<br>Sub Inspector of Police,<br>Thuckalay Police Station,<br>Thuckalay. (Cr.No.29/2023).<br>.....Complainant |
| 3. | Name of the Accused person | Description of the Accused | 1. Naga Rajan<br>2. Rajan @ Vawval<br>3. Sheeba<br>4. Vincent Churchil |
| 4. | Father's/Husband's Name | | 1. Son of Annamalai<br>2. Son of Prabhakaran<br>3. Wife of Nagarajan<br>4. Son of Chandraseker |
| 5. | Occupation | | A1 to A4 - Coolie |
| 6. | Residence of the Accused | | 1. 35/55, Chetti Street, Padmanabhapuram, Thuckalay Post.<br>2.Mudakulam, Padmanabhapuram, Thuckalay Post.<br>3. 35/55, Chetti Street, Padmanabhapuram, Thuckalay Post.<br>4. 3/24 C, Sarode, Koil Vilai, Thuckalay Post. |
| 7. | Age and Gender | | 1. 51/2023, Male<br>2. 37/2023, Male<br>3. 42/2023, Female<br>4. 21/2023, Male |
| 8. | Date of Occurrence | Date of | 18.01.2023 at 04.15 PM |
| 9. | Date of Information to the Police | | 19.01.2023 at 10.30 AM |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | Apprehension | | A2-31.01.2023<br>A1, A3, A4 – Anticipatory Bail | | |
| 11. | Release on Bail | | A2- 03.02.2023 | | |
| 12. | Period of remand of the accused | | -- | | |
| 13. | Filing of complaint/final report in the Court | Date of | 01.03.2023 | | |
| 14. | Committal of the case to the Court of Sessions | | Nil | | |
| 15. | Questioning of the accused u/s 281 of Cr.P.C | | 22.05.2023 | | |
| 16. | Commencement of Trial (the date on which the documents u/s 207 of the Cr.P.C are furnished to the accused | | 10.05.2023 | | |
| 17. | Examination in Chief and Cross examination of a witness | | Witness | Chief Examination | Cross Examination |
| | | | P.W.1 | 29.09.2025 | 29.09.2025 |
| | | | P.W.2 | 27.05.2026 | 27.05.2026 |
| 18. | Date of examination of the accused under section 313(1)(b) of Cr.P.C | | 01.06.2026 | | |
| 19. | Closure of Trial | | 01.06.2026 | | |
| 20. | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be | | Warrant | Abscondence | Appearance |
| | | | Non-Bailable Warrant | - | - |
| 21. | Grant of stay by superior Courts and results thereof | | Nil | | |
| 22. | Sentence or Order | | முடிவாக, 1, 2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 324, 427 மற்றும் 506(ii)-ன் கீழும், 3, 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 323 மற்றும் 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளிப்பது நீதியின்பாற்பட்டது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் 1 முதல் 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து 1 முதல் 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை இவ்வழக்கின் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் 1 முதல் 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |
| 23. | Service of copy of judgment of findings on accused | | Copy of the judgment will be uploaded in CIS and made available for viewing in e-courts services portal. | | |
| 24. | Explanation of delay | | - | | |
| 25. | Details of victim compensation ordered | | Nil | | |
| 26. | Filing of miscellaneous petitions and their results including the results on challenge before Superior Court | | Petition | Crl.M.P.No | Result |
| | | | | | |

இவ்வழக்கு 01.03.2023 அன்று நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு 03.06.2026 இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.விஜயகுமார்., அவர்கள் ஆஜராகியும் வாதத்தை கேட்டும் ஆவணங்களை ஆராய்ந்தும் இன்று 03.06.2026 ஆம் தேதி நீதிமன்றம் கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVII ன் கீழ் பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

**1.** இவ்வழக்கானது தக்கலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இந்திய தண்டனைச்சட்டம் 341, 294(பி), 323, 324, 427, 506(ii) ஆகிய பிரிவின் கீழ் குற்ற எண்.455/2019-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதியறிக்கையின்பேரில் தொடரப்பட்டதாகும்.

**2. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :-**

இவ்வழக்கில் கடந்த 18.01.2023 ம் தேதி மாலை சுமார் 04.15 மணியளவில் புகார்தாரர் அவருடைய TN 59 AT 0005 என்ற பதிவெண் கொண்ட காரில் சாட்சி 3 ஜெனிஷ் என்பவர் காரை ஓட்டியும், சாட்சி 4 ஜாண்விக்டர் ஆகியோருடன் பத்மநாபபுரம் அரண்மனையை சுற்றிப்பார்க்க சென்றபோது அரண்மனை வளாகத்தில் கடை வைத்து வியாபாரம் செய்து வரும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் சாட்சி 1-ன் காரால் தான் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக பிரச்சனை செய்துள்ளார்கள். இதனால் புகார்தாரர் அந்த இடத்திலிருந்து விலகி காரில் சென்று கொண்டிருக்கும்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீண்டும் புகார்தாரரின் காரை தடுத்து நிறுத்தியபோது, புகார்தாரர் காரிலிருந்து கீழே இறங்கி எதற்கு பிரச்சனை செய்கிறீர்கள் என கேட்டதற்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நான்குபேரும் மாறி மாறி புகார்தாரரை பார்த்து தேவடியாமோனே, புண்டாமோனே என அசிங்கமாக கெட்டவார்த்தைகள் பேசி புகார்தாரருக்கு அசிங்கமும், அருவருப்பும் ஏற்படுத்தியதாகவும், 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கம்பியால் புகார்தாரரின்

முன் தலையில் தாக்கி சிறுகாயம் ஏற்படுத்தியதாகவும், 2-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் இளநீர் வெட்டும் கத்தியின் மூடால் புகார்தாரரின் இடது தொடையில் அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியதாகவும், 3,4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கையாலும், காலாலும் மாறி, மாறி புகார்தாரரை தாக்கியும், 1 ,2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரின் காரின் முன் மற்றும் பின் பக்க கண்ணாடிகளை அடித்து ரூ.54,800/- க்கு சேதம் ஏற்படுத்தியதாகவும், சம்பவத்தை பார்த்த சாட்சிகள் சத்தம்போட்டு தடுக்கவும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நான்குபேரும் புகார்தாரரை பார்த்து பத்மநாபபுரம் பகுதியில் இனிமேல் வந்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து புகார்தாரருக்கு மரண பயத்தை ஏற்படுத்தியதாகவும் குறிப்பிட்டு 1, 2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 324, 427 மற்றும் 506(ii)-ன் கீழும், 3, 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 323 மற்றும் 506(ii)-ன் கீழும், தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 207 ன் கீழ் வழக்கு ஆவண நகல்கள்</u> :-

இவ்வழக்கின் 1 முதல் 5 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச 1973 பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**4. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 240 ன் கீழ் குற்றச்சாட்டு வனைதல் :-</u>**

வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் 1 முதல் 4 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால், கு.வி.மு.ச 1973 பிரிவு 240 ன் கீழ் 1, 2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 324, 427 மற்றும் 506(ii)-ன் கீழும், 3, 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 323 மற்றும் 506(ii)-ன் கீழும் தனித்தனியே குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது.

**5.** வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை கு.வி.மு.ச **1973 பிரிவு 240(2)-ன்** படி தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினவப்பட்டது. இவ்வழக்கின் 1 முதல் 4 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பொய் வழக்கு எனவும், வழக்கை மேற்கொண்டு நடத்த விருப்பம் செய்கிறோம் எனகூறி குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார்கள். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச 1973 பிரிவு 242 ன் கீழ் உத்தரவிடப்பட்டது.

**6. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 242 ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-</u>**

அரசுத்தரப்பில் அ.சா.1 ஸ்பர்ஜென், அ.சா.2 ராஜகுமார் (தலைமை காவலர்) ஆகியோர்கள் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் அரசு தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

## 7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்

கடந்த 18.01.2023 ம் தேதி மாலை சுமார் 04.15 மணியளவில் புகார்தாரர் அவருடைய TN 59 AT 0005 என்ற பதிவெண் கொண்ட காரில் சாட்சி 3 ஜெனிஷ் என்பவர் காரை ஓட்டியும், சாட்சி 4 ஜாண்விக்டர் ஆகியோருடன் பத்மநாபபுரம் அரண்மனையை சுற்றிப்பார்க்க சென்றபோது அரண்மனை வளாகத்தில் கடை வைத்து வியாபாரம் செய்து வரும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரின் காரால் தான் அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக பிரச்சனை செய்துள்ளார்கள். இதனால் புகார்தாரர் அந்த இடத்திலிருந்து விலகி காரில் சென்று கொண்டிருக்கும்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீண்டும் புகார்தாரரின் காரை தடுத்து நிறுத்தியபோது, புகார்தாரர் காரிலிருந்து கீழே இறங்கி எதற்கு பிரச்சனை செய்கிறீர்கள் என கேட்டதற்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நான்குபேரும் மாறி மாறி புகார்தாரரை பார்த்து தேவடியாமோனே, புண்டாமோனே, என அசிங்கமாக கெட்டவார்த்தைகள் பேசி புகார்தாரருக்கு அசிங்கமும், அருவருப்பும் ஏற்படுத்தியதாகவும், 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கம்பியால் புகார்தாரரின் முன் தலையில் தாக்கி சிறுகாயம் ஏற்படுத்தியதாகவும், 2-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் இளநீர் வெட்டும் கத்தியின் மூடால் புகார்தாரரின் இடது தொடையில் அடித்து சிறுகாயம் ஏற்படுத்தியதாகவும், 3, 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கையாலும், காலாலும் மாறி, மாறி புகார்தாரரை தாக்கியும், 1 ,2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரின் காரின் முன் மற்றும் பின் பக்க கண்ணாடிகளை அடித்து ரூ.54,800/- க்கு சேதம் ஏற்படுத்தியதாகவும்,

சம்பவத்தை பார்த்த சாட்சிகள் சத்தம்போட்டு தடுக்கவும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நான்குபேரும் புகார்தாரரை பார்த்து பத்மநாபபுரம் பகுதியில் இனிமேல் வந்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து புகார்தாரருக்கு மரண பயத்தை ஏற்படுத்தியதாகவும் குறிப்பிட்டு 1, 2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 324, 427 மற்றும் 506(ii)-ன் கீழும், 3, 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 323 மற்றும் 506(ii)-ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றத்திற்குரிய இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**8.** அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து தெரிய வரும் அரசு வழக்கின் சுருக்கம் என்னவென்றால், நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 ஸ்பர்ஜென்** அவரது சாட்சியத்தில் சம்பவம் பற்றியும், காவல்நிலையத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்தது பற்றியும், **அ.சா.2 ராஜ குமார் (கூடுதல் சாட்சி) (தலைமை காவலர்)** என்பவரின் சாட்சியத்தில், 19.01.2023-ம் தேதியன்று 08.30 மணிக்கு தலைமை காவலர் ஜோஸ்பிரபு நிலைய அலுவலில் இருந்தபோது, பார்வதிபுரம் பிராங்கிளின் மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் அடிப்படையில், அங்கு சென்று சிகிச்சையில் இருந்த அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பெற்று, அதன் தன்மைக்கேற்ப தக்கலை காவல்நிலைய குற்ற எண்.29/2023, சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 323, 324, 427, 506(ii) இதச-ன் கீழ் வழக்கு பதிவு செய்து

**அ.சா.ஆ.2** முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கு கோப்பை விசாரணை எடுத்துக்கொண்டு, 19.01.2023-ம் தேதி 11.30 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, **அ.சா.ஆ.3** மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** தயார் செய்ததாகவும், 1 முதல் 5 வரையிலான பட்டியல் சாட்சிகளை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், காயம்பட்ட நபரான அ.சா.1-க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பிளஸ்டு பென்னி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றும், வழக்கின் புலன்விசாரணையை முடித்து, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. **<u>கு.வி.மு.ச 1973 பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவுதல்</u>** :-

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து 1 முதல் 4 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து 1 முதல் 4 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் கு.வி.மு.ச 1973 பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவ 1 முதல் 4 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும் தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் பதில் அளித்தார்கள்.

**10. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 243-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்.</u>**

1 முதல் 4 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சிய சாண்றாவணம் எதுவும் இல்லை என்று கூறப்பட்டதால் மேற்படி தரப்பு

சாட்சியம் முடிக்கப்பட்டு அதனடிப்படையில் 1 முதல் 4 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் எவ்வித சாட்சியங்களும், சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**11.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சீராய்ந்து பரிசீலனை செய்யப்பட்டன.

**12.** அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்திருப்பதாகவும், எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**13.** குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பில் நம்பதகுந்த சாட்சிகள் யாரும் விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்யவேண்டுமென்று கூறி வாதிட்டார்.

**14. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-</u>**

1) இவ்வழக்கில் 1, 2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 324, 427 மற்றும் 506(ii)-ன் கீழும், 3, 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 323 மற்றும் 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

**15. பிரச்சனைக்கான தீர்வுகள் :-**

புகார்தாரரும் காயம்பட்ட நபரான அ.சா.1 ஸ்பர்ஜென் என்பவரின் சாட்சியத்தில், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை தெரியும் என்றும், தற்போது ஊர் பெரியவர்கள் முன்னிலையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டேன் என்றும் புகார் வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்ட வகையில் சாட்சியமளித்துள்ளார்.

**16.** மேற்படி அ.சா.1-ன் சாட்சியத்தை பரிசீலினை செய்தபோது குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் அ.சா.1-ன் காரை தடுத்து நிறுத்தி, ஆபாசமாக பேசி தொல்லை ஏற்படுத்தியதாகவோ, அ.சா.1-ஐ அடித்து காயப்படுத்தியதாகவோ, மிரட்டியதாகவோ, கார் கண்ணாடிகளை உடைத்து சேதம் ஏற்படுத்தியதாகவோ குறிப்பிட்டு அ.சா.1 எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**17.** மேலும், அ.சா.2 ராஜகுமார் கூடுதல் சாட்சி, ஆவணங்களின் அடிப்படையில், புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக சாட்சியமளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில் புலனாய்வு அதிகாரி வழக்கை, கோப்புக்கு எடுத்துக்கொண்டு முதல் தகவல் அறிக்கையின் பேரில் முறையாக விசாரணை செய்து அதன் அடிப்படையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து உரிய மருத்துவரிடம் காயச்சான்று பெற்று சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பெற்று, அதன் பிறகு விசாரணை முடிக்கப்பட்டு

மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார்.

**18.** இந்த வழக்கை பொறுத்தவரை நிகழ்நிலை புகார்தாரரும் பாதிக்கப்பட்ட நபருமான அ.சா.1 ஸ்பர்ஜென் என்பவர் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுடன் சமாதானமாக சென்றுவிட்டதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் இந்த வழக்கில் அரசுத்தரப்பு சங்கதிகளுக்கு ஆதரவாக மேற்படி அ.சா.1 ஸ்பர்ஜென் எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**19.** அரசுத்தரப்பில் அ.சா.2 மட்டுமே அரசுத்தரப்பு சங்கதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வழக்கின் ஒரு புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியமானது சம்பவ இடத்தில் தயார் செய்யப்பட்ட குற்றம் நடந்த இடத்தை குறிப்பிட்டுக் காட்டக்கூடிய மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் ஆகியவற்றை பொறுத்து நேரடி சாட்சியம் என்றாலும் மற்ற சங்கதிகளை பொறுத்து அவர் கேள்விநிலை சாட்சியாவார். அ.சா.2 ஆன காவல் அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இந்த வழக்கினை தீர்வு காண இயலாது என்பதையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

**20.** இந்த வழக்கில் அரசுத்தரப்பில் கூறியுள்ளது போல் குற்ற சம்பவத்தை இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் செய்தார்கள் என்பதற்கான தகுந்த சாட்சிய

சான்றாவணங்களை அரசுத்தரப்பில் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காததால், அரசுத்தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டது என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

21. மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகள், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் விதம், சாட்சிகளின் நம்பகத்தன்மை மற்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்ட விதம் ஆகியவை குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமளிக்காத வகையில் ஏற்கத்தக்க உரிய விளக்கங்கள் மற்றும் காரணங்கள் ஏதும் அளிக்கப்படாததால் அரசு தரப்பானது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிரான வழக்கினை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

22. மேற்சொன்ன விவரங்களை கருத்தில் கொண்டு சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையில் 1, 2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 324, 427 மற்றும் 506(ii)-ன் கீழும், 3, 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 323 மற்றும் 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்றுஇந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**23. <u>தீர்வு</u>:-**

முடிவாக, 1, 2 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 341,

294(b), 324, 427 மற்றும் 506(ii)-ன் கீழும், 3, 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 341, 294(b), 323 மற்றும் 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 வரையிலான குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளிப்பது நீதியின்பாற்பட்டது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் 1 முதல் 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து 1 முதல் 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை இவ்வழக்கின் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் 1 முதல் 4 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**24. கு.வி.முச 1973 பிரிவு 452 ன் கீழ் உத்தரவு:-**

இவ்வழக்கில் தடயச்சொத்து எதுவும் கைப்பற்றப்படாததால் அது குறித்து உத்தரவு எதுவும் கு.வி.மு.ச 1973 பிரிவு 452-ன் கீழ் பிறப்பிக்கப்படவில்லை.

**25. வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437-A- ன் கீழ் உத்தரவு**

வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437-A- ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது அப்பிணையப்பத்திரம் பெறப்பட்ட தேதியில் இருந்து 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும்.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம்

செய்யப்பட்டு இன்று (03.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை அவையறியப்பகரப்பட்டது.

ஒம்/- திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,
நீதித்துறை நடுவர்,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,
பத்மனாபபுரம்

**பின் இணைப்பு**

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | ஸ்பர்ஜென் | 29.09.2025 | அ.சா.ஆ.1 |
| அ.சா.2 | ராஜகுமார்(தலைமை காவலர்) | 27.05.2026 | அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ. 4 வரை |

**அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 19.01.2023 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2/அ.சா.2 | 19.01.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3/அ.சா.2 | 19.01.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.4/ அ.சா.2 | 19.01.2023 | பார்வை மகஜர் |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்** : இல்லை

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில், சாட்சி , சான்றாவணங்கள்** : இல்லை

**குறிப்பு** :-

1. வழக்கு விசாரணை காலத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பிணையில் சென்றுள்ளார்கள்.

2. எந்தவொரு அரசு தரப்பு சாட்சியமும் 3 நாட்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒம்/- திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,
நீதித்துறை நடுவர்,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,
பத்மனாபபுரம்

Judicial Magistrate Court No.1,
Padmanabhapuram.

Court Seal.

“ The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date’’.